4. அறிவிப்பு

முக்கியப் பிரமுகர்கள் இருக்கையிலிருந்து பேரவை நடவடிக்கைகளைக் கண்ணுறும் சிங்கப்பூர் நாட்டுக் குழுவினருக்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சிங்கப்பூர் நாட்டிலிருந்து முக்கியப் பிரமுகர்கள் நமது சட்டப் பேரவையைப் பார்வையிட வந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)* Mr. George Yeo, Minister for Foreign Affairs, Mrs. Jennifer Yeo, Spouse of the Minister, Mr. Gopinath Pillai, Ambassador-at-large, Mr. Calvin Eu, Singapore High Commissioner in New Delhi, Mr. Ajit Singh, Singapore Consul-General in Chennai, Mr. Premjith Sadasivan, Director, South Asia and Sub-Saharan Africa Directorate, Ministry of Foreign Affairs, (Thumping of desks) Mr. Low Hon Mun, Special Assistant to Minister, Ministry of Foreign Affairs, Mr. Cai Jinhang David, Country Officer, South Asia and Sub-Saharan Africa Directorate, Ministry of Foreign Affairs *ஆகிய இவர்களைப் பேரவையின் சார்பாக வரவேற்கின்றேன்.* On behalf of the Members of the Legislative Assembly, I welcome all the delegates who have come from Singapore for witnessing the proceedings of the Tamil Nadu Legislative Assembly. Thank you. *(மேசையைத் தட்டும் ஒலி)*

5. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுவின் தலைவர்.*

திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2009-2010 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 81 முதல் 86 வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*